DIRECTOR OF MATRICULATION
30/09/21
CHENNAI-600 006

4327

சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத் துறை
தலைமைச் செயலகம்
சென்னை-9.

கடித எண்.10711/சந6(1)/2021-2, நாள் 29.09.2021.

அனுப்புநர்
திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை செயலாளர்,
பள்ளி கல்வித் துறை,
சென்னை-9. (இ). (பெயரிட்ட உறையில்)
முதன்மை செயலாளர்,
உயர் கல்வித் துறை,
சென்னை-9. (இ). (பெயரிட்ட உறையில்)

அய்யா/அம்மையீர்,

பொருள்: சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - முதியோர் நலம் - சர்வதேச முதியோர் தினத்தை அக்டோபர் 1ம் தேதி கொண்டாடுதல் - பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே முதியோர்களை பராமரிக்கும் வண்ணமாக உறுதிமொழி எடுக்க அறிவுறுத்துதல் -குறித்து.

பார்வை:
1. அரசாணை (3ப) எண்.3, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 08.09.2021.
2. சமூக நல இயக்குநரகம் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட ந.க.எண். 20613/மா.1/ 2021, நாள் 17.09.2021

*****

பார்வை ஒன்றில் காணும் அரசாணை(3ப) எண்.3, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 08.09.2021-ல், 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாளன்று சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுவதற்குத் திட்டத் தொடராணை வழங்கியும், மாநில அளவில் கொண்டாடுவதற்கு ரூ.2,50,000/-மும், மாவட்ட அளவில் கொண்டாடுவதற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.10,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.3,20,000/-மும் ஆக மொத்தம் ரூ.5,70,000/-க்கு செலவினம் மேற்கொள்ள அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(கு.பி.பா.)

2. சர்வதேச முதியோர் தினமான அக்டோபர், 1, 2021 அன்று இணைப்பில் உள்ள உறுதிமொழியினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் முதியோர்களை பராமரிக்கும் வண்ணமாக 2021-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் உறுதிமொழி எடுப்பதற்கு ஏதுவாக இணைப்பில் கண்டுள்ளவாறு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

29/9/21

அரசு முதன்மைச் செயலாளருக்காக

29/9/21

நகல்:
சமூக நல இயக்குநர்,
சென்னை-15

ந.க. எண்: 4327/ அ1/2021 நாள்: 30.09.2021

(நகல்) தகவலுக்காகவும் உரிய தக்க நடவடிக்கைக்காகவும்

அனுப்பலாகிறது.

30/9/2021

இயக்குநர்,
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,
சென்னை - 6.

பெறுநர்

அனைத்து மாவட்ட மெ.க.அ

30/9/21 30/09/2021 30/09/2021

**இணைப்பு**

**சர்வதேச முதியோர் தின உறுதிமொழி – அக்டோபர் 1**

சிறுவயதில் என்னை கவனமுடன் பராமரித்து வளர்க்கின்ற பெற்றோர்களையும், அளவில்லாத அன்பைப் பொழியும் தாத்தா, பாட்டியையும் அரவணைத்து பாசத்துடன் நடத்துவேன். எனது வீட்டிற்கு அருகில் உள்ள முதியவர்களையும், சமுதாயத்தில் நான் தினமும் சந்திக்கும் முதியவர்களையும் கேலி கிண்டல் செய்யாமல் அனைவரையும் கடுஞ்சொற்களால் பேசாமல் அன்புடன் நடத்துவேன். எனது எதிர்காலம் எனது கல்வியினால் மட்டுமல்லாது அவர்களது ஊக்குவிப்பினாலும் தான் என்பதை புரிந்து கொண்டுள்ளேன்.

முதியோருக்கு என்னாலான உதவிகள் செய்து அவர்களுக்கு எவ்வித இன்னல்களும் ஏற்படாதவண்ணம் அவர்களைப் பாதுகாப்பேன். முதியோரின் அனுபவங்களை பொக்கிஷமாகக் கருதி அவர்கள் காட்டும் நல்வழியில் நடப்பேன். இதனை எனது சக நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எடுத்துக்கூறுவேன் என்று உளமாற உறுதி கூறுகிறேன்.

**ஷம்பு கல்லோலிகர்,**
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

உ. மோகன் 29/9/21
பிரிவு அலுவலர்